**ஜூலை - 15**

**"எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், அன்பு எனக்கிராவிட்டால், எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை." - 1கொரி 13 : 3**

ஜனங்களுக்கு நாம் ஊழியம் செய்யும்போது, அவர்களுக்கு மிகவும் தேவையாயிருப்பது பணம் மட்டுமல்ல என்பதை நாம் மறந்து விடாதிருப்போமாக. பணம் தேவையில்லாத சிலருக்கு அன்பும் அனுதாபமும் தேவையாயிருக்கிறது. நம்முடைய கர்த்தரும் அவர்களில் ஒருவர். அன்பு நிறைந்த அவருடைய சொந்த இருதயம், ஒத்துப்பார்க்கில் மனித வம்சத்தில் மிக உயர்ந்த ஜனங்களின் பிரதிநிதியாக நின்ற தன்னுடைய அப்போஸ்தலரின் கிட்டத்தட்ட அழுக்காயிருந்த மனதில் கொஞ்சம் தோழமையைக் கண்டது. மரியாளில் அவர் அன்பின் ஆழத்தையும் பக்தியின் ஆழத்தையும் கண்டார். அது அவருக்கு இனிமையான தூப வாசனையாகவும், இளைப்பாறுதலின் வாசனையாகவும், மறுஉற்சாகத்தைக் கொடுக்கிற வாசனையாகவும், ஒரு தேக ஆரோக்கிய மருந்தாகவும் இருந்தது. மரியாள் மற்றவர்களைவிட அதிகமாக போதகரின் குணத்தின் ஆழங்களையும் அகலங்களையும் உயர்வாக மதித்தாள் என்று தெளிவாகத் தெரிகிறது. அவள் அவருடைய பாதங்களின் அருகே உட்கார்ந்து அவரிடம் கற்றுக் கொள்ளுவதில் மாத்திரம் சந்தோஷமடையவில்லை. ஆனால் மிகுந்த செலவில் தன்னுடைய பக்தியையும் அன்பையும் ஏதோ கொஞ்சம் வெளிப்படையாகக் காட்டுவதிலும் சந்தோஷமடைந்தாள். **- Z ’99, 77 (R 2447)**

அன்பில்லாமல் கொடுப்பது சாத்தியமானது என்பதை அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் குறிக்கின்றன. நாம் இந்தக் காரியத்தை நினைக்கிறபடி, சிலர் வீண் புகழ்ச்சிக்காகவும், சிலர் வேஷமாகவும் (நடிப்பாகவும்) சிலர் லாபத்திற்காகவும், சிலர் பொறாமையினாலும், போட்டிக்கென்றும் கொடுக்கிறார்கள் என்கிற உண்மையிலிருந்து அவர் சொல்லிய விஷயத்திலுள்ள உண்மையை ஒப்புக்கொள்ளுகிறோம். இவ்விதமாகக் கொடுப்பது, ஒருவருக்கு நன்மை பயக்குவதற்குப் பதிலாக, திட்டமாக அது அவரை ஒழுக்கம் வழுவச் செய்கிறது. கொடுக்கிறவனையும் வாங்குகிறவனையும் ஆசிர்வதிக்கத்தக்கதாக, பிரதி பிரயோஜனமின்றிக் கொடுப்பது, தெய்வீக அன்பிலிருந்து பாய்ந்தோட வேண்டும். **- P ’26, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோவா 13:34; 1கொரி 13:1,2,4-13; 16:14; 2கொரி 9:7; மத் 6:1-4; 7:22,23; நீதி 17:9; கலா 5:6; 1தெச 4:9; 2தெச 1:3; 1தீமோ 1:5; 1பேது 4:8; 1யோவா 3:14-18.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 215 (R 5926)**

**வினாக்கள் : என்ன நோக்கத்துடன் நான் இந்த வாரத்தில் நன்மை செய்தேன்? அதில் எது இடையூறாகவும், எது உதவியாகவும் இருந்தது? அந்தச் சந்தர்ப்பங்கள் எவை? பலன்கள் எவை?**